## கண்டி மாநகர சபைக்காக பணிகளைக் கொள்வனவு செய்தல் அடிப்படையில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

கண்டி மாநகர சபையின் சேவைத் தேவைப்பாடுகளுக்கு அமைய, பணிகள் கொள்வனவு செய்யும் அடிப்படையில் பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காகத் தகைமைகளையுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கமைய, விண்ணப்பங்களை உள்ளடக்கப்படுகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் சேவையின் பெயரைக் குறிப்பிட்டு, 2026.10.09 ஆம் திகதிக்கு முன்னர் "மாநகர ஆணையாளர், கண்டி மாநகர சபை, கண்டி" எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

### 01. சாரதிச் சேவையைப் பெற்றுக்கொள்ளல்
### (ட்ரக்டர் வாகனச் சாரதி / லொறிச் சாரதி)

1. பதவிகளின் எண்ணிக்கை : 07 பதவிகள்

2. வயது : அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும், 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. கொடுப்பனவு : நாளாந்தக் கொடுப்பனவு ரூ. 2019.33 ஆகும். (மாதமொன்றுக்குக் குறைந்தது 25 நாட்கள் கடமையாற்ற வேண்டும்).

4. கல்வித் தகைமைகள : கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது 2 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இவற்றில் 05 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் கட்டாயமாகும்.

5. தொழில்த் தகைமைகள் : மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட, ஒவ்வொரு பதவிக்கும் உரித்தான மோட்டார் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல்.

   கழிக்கத்தகு நிறை (Tare weight) 34 அந்தர் இற்கு மேற்பட்ட பாரிய மோட்டார் வாகனங்கள், பாரிய ட்ரெய்லர்கள் மற்றும் 32 அந்தரிற்கு மேற்படாத பயணிகளைக் கொண்டு செல்லக்கூடிய பஸ் வண்டிகளுக்கான சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருத்தல். (விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு 03 வருடங்களுக்கு முன்னர், குறைந்தது மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட 'A' வகுப்பிலான வாகன அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திர முறைமைக்கமைய 'B' வகுப்பிலான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல்).)

6. அனுபவம் : மோட்டார் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றதன் பின்னர் குறைந்தது 03 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் (அனுபவமானது சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்).

7. உடற் தகைமைகள் : பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு எல்லாவகையிலும் உடல் ரீதியாகத் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

   குறைந்தபட்ச உயரம் 5 அடி 2 ½ அங்குலமாக இருத்தல் வேண்டும்.

   ஒவ்வொரு பரீட்சார்த்தியும் சிறந்த கண்பார்வையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், பகல் நேரத்திலும் இரவு நேரத்திலும் சேவையில் ஈடுபடுவதற்குப் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8. தெரிவு செய்யும் முறை : விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளவர்களுள், ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் தகுதிகாண் பரீட்சை ஆகியவற்றுக்கு உட்படுத்தப்படுவர். அத்துடன், தேவையான அனைத்துத் தகைமைகளையும் பரீட்சித்ததன் பின்னர், உரிய தகைமைகளைக்

கொண்ட விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் முன்னுரிமைக்கமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

சேவையை வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்படுபவர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டே சேவையில் ஈடுபடுத்தப்படுவர்:

1. எந்தவொரு பணி முறைமையிலும் (Shift) கடமையாற்றுவதற்குச் சம்மதித்தல் வேண்டும்.
2. முழு நேர அடிப்படையில் கடமைகளில் ஈடுபடல் வேண்டும்.
3. சேவை வழங்குவது தொடர்பான 01 வருடக் காலப்பகுதிக்கான சேவை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் வேண்டும் என்பதுடன், சேவைத் தேவைக்கமைய இக்காலப்பகுதி நீடிக்கப்படும்.

7. வேறு தகைமைகள் :

- விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். கண்டி மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில், நகர எல்லைக்கு வெளியிலான விண்ணப்பதாரர்கள் தொடர்பில் பரிசீலிக்கப்படும்).
- ஆட்சேர்ப்புக்கான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

## 02. நீர்ப்பம்பி இயக்குபவர் சேவையைப் பெற்றுக்கொள்ளல்

1. பதவிகளின் எண்ணிக்கை : 05 பதவிகள்

1. வயது : அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும், 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

2. கொடுப்பனவு : நாளாந்தக் கொடுப்பனவு ரூ. 1986.66 ஆகும். (மாதமொன்றுக்குக் குறைந்தது 25 நாட்கள் கடமையாற்ற வேண்டும்).

3. கல்வித் தகைமைகள் : கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது 2 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இவற்றில் 05 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் கட்டாயமாகும்.

4. தொழில்த் தகைமைகள் : NVQ 3 ஆம் மட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான மின் தொழில்நுட்பவியலாளர் / இயந்திரவியல் தொழில்நுட்பவியலாளர் அல்லது அதனுடன் தொடர்புடைய பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல்.

5. அனுபவம் : குறித்த துறையில் குறைந்தது ஒரு வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் (அனுபவமானது சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்).

6. உடற் தகைமைகள் : பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு எல்லாவகையிலும் உடல் ரீதியாகத் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

7. தெரிவு செய்யும் முறை : விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளவர்களுள், ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் தகுதிகாண் பரீட்சை ஆகியவற்றுக்கு உட்படுத்தப்படுவர். அத்துடன், தேவையான அனைத்துத் தகைமைகளையும் பரீட்சித்ததன் பின்னர், உரிய தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்கள்

பெற்றுக்கொண்ட புள்ளிகளின் முன்னுரிமைக்கமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

சேவையை வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்படுபவர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டே சேவையில் ஈடுபடுத்தப்படுவர்:

.

1. எந்தவொரு பணி முறைமையிலும் (Shift) கடமையாற்றுவதற்குச் சம்மதித்தல் வேண்டும்.

2. முழு நேர அடிப்படையில் கடமைகளில் ஈடுபடல் வேண்டும்.

3. சேவை வழங்குவது தொடர்பான 01 வருடக் காலப்பகுதிக்கான சேவை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் வேண்டும் என்பதுடன், சேவைத் தேவைக்கமைய இக்காலப்பகுதி நீடிக்கப்படும்.

8. வேறு தகைமைகள் :

- விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். கண்டி மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில், நகர எல்லைக்கு வெளியிலான விண்ணப்பதாரர்கள் தொடர்பில் பரிசீலிக்கப்படும்).
- ஆட்சேர்ப்புக்கான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

9. சேவையின் ஊடாக நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படும் பணிகள்:

1. பாவனையாளர்களுக்குத் தடையின்றி நீரை விநியோகித்தல்.
2. பாவனையாளர்களுக்குத் தடையின்றி நீரை விநியோகித்தல்.
3. இயந்திர உபகரணங்கள் மற்றும் நீர்ப்பம்பிகளின் குறைபாடுகளைக் கண்காணித்துச் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவித்தல்.
4. நாளாந்த இயங்கு நேரங்கள் மற்றும் நீர்மானி வாசிப்புக்களைப் பதிவேடுகளில் (டுழப டிழழமள) திருத்தமாகப் பதிவு செய்தல் பிரதான கடமையாகும்.
5. நீர்ப்பம்பி நிலைய வளாகத்தின் தூய்மை மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்தல்.
6. பொருட்பட்டியல் (Inventory) பொருட்களைப் பாதுகாத்தல்.
7. கணக்காய்வு நடவடிக்கைகளின் போது ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் அவசர நிலைமைகளின் போது உயர் அதிகாரிகளுக்கும் பிரதான அலுவலகத்திற்கும் அறிவித்துச் செயலாற்றுதல்.

## 03. நீர்மானி வாசிப்பாளர் சேவையைப் பெற்றுக்கொள்ளல்

1. பதவிகளின் எண்ணிக்கை : 03 பதவிகள்

2. வயது : அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும், 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. கொடுப்பனவு : நாளாந்தக் கொடுப்பனவு ரூ. 1926.66 ஆகும். (மாதமொன்றுக்குக் குறைந்தது 25 நாட்கள் கடமையாற்ற வேண்டும்).

4. கல்வித் தகைமைகள் : கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது 2 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5. உடற் தகைமைகள் : பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு எல்லாவகையிலும் உடல் ரீதியாகத் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்..

6. தெரிவு செய்யும் முறை : விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளவர்களுள், ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் தகுதிகாண் பரீட்சை ஆகியவற்றுக்கு உட்படுத்தப்படுவர். அத்துடன், தேவையான அனைத்துத் தகைமைகளையும் பரீட்சித்ததன் பின்னர், உரிய தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்கள்

பெற்றுக்கொண்ட புள்ளிகளின் முன்னுரிமைக்கமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

சேவையை வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்படுபவர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டே சேவையில் ஈடுபடுத்தப்படுவர்:

1. எந்தவொரு பணி முறைமையிலும் (Shift) கடமையாற்றுவதற்குச் சம்மதித்தல் வேண்டும்.

2. முழு நேர அடிப்படையில் கடமைகளில் ஈடுபடல் வேண்டும்.

3. சேவை வழங்குவது தொடர்பான 01 வருடக் காலப்பகுதிக்கான சேவை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் வேண்டும் என்பதுடன், சேவைத் தேவைக்கமைய இக்காலப்பகுதி நீடிக்கப்படும்.

8. வேறு தகைமைகள் :

- விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். கண்டி மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில், நகர எல்லைக்கு வெளியிலான விண்ணப்பதாரர்கள் தொடர்பில் பரிசீலிக்கப்படும்).
- ஆட்சேர்ப்புக்கான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

9. சேவையின் ஊடாக நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படும் பணிகள்:

1. தமக்கு ஒதுக்கப்படும் பிரதேசத்திலுள்ள பாவனையாளர்களின் இடங்களுக்குச் சென்று, நீர்மானி வாசிப்பினைத் திருத்தமாகப் பெற்று, அன்றைய தினமே பாவனையாளர்களின் கையடக்கத் தொலைபேசிகளுக்குக் குறுஞ்செய்திகளை அனுப்பிவைத்தல்.
2. உரிய அறிக்கைகள் மற்றும் காபன் பிரதிகளைப் பாவனையாளரின் கையொப்பத்துடன் அலுவலகத்தில் கையளித்தல்.
3. நீர்ப் பயன்பாட்டிலான அசாதாரண மாற்றங்கள், வீட்டுப் பாவனைக்கான நீரை வேறு வியாபார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துதல், சட்டவிரோத நீர் இணைப்புகள் மற்றும் பாவனையாளர்களின் முறைப்பாடுகள் தொடர்பில் உயர் அதிகாரிகளுக்கு எழுத்துமூலம் அறிக்கையிடுதல்.

4. பட்டியல்களை (Bills) வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் அதற்கான காரணங்களைக் குறிப்பிடுதல்.
5. திணைக்களத்தின் வருமானத்தைப் பாதுகாக்கும் வகையில், உயர் அதிகாரிகளினால் அவ்வப்போது ஒதுக்கப்படும் ஏனைய தொடர்புடைய கடமைகளை மேற்கொள்ளல்.

குறிப்பு :- இச்சேவைகளில் ஈடுபடுத்துவதற்கான விண்ணப்பங்களைக் கண்டி மாநகர சபையின் www.kandy.mc.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அவசியமான அனைத்துத் தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், சேவையைப் பெற்றுக்கொள்வது தொடர்பான இறுதி முடிவு கண்டி மாநகர சபையின் மாநகர ஆணையாளருக்கு உரியதாகும். விண்ணப்பங்களைக் கோரியதன் பின்னர் அல்லது கோரும் இடைப்பட்ட காலப்பகுதியில், இவ்வாட்சேர்ப்பைத் தாமதப்படுத்துதல், மாற்றுதல், இவ்வறிவித்தலை இரத்துச் செய்தல், இவ்வறிவித்தலைத் திருத்தம் செய்தல் தொடர்பான முழுமையான அதிகாரம் கண்டி மாநகர சபையின் மாநகர ஆணையாளருக்கு உரியதாகும்.

2026.09.25

ஏ. எச். எம். இந்திகா குமாரி அபேசிங்க<br>
மாநகர ஆணையாளர்<br>
கண்டி மாநகர சபை

**மாதிரி விண்ணப்பம்**
**கண்டி மாநகர சபைக்காக உழைப்பைக் கொள்வனவு செய்யும் அடிப்படையில்**
**ட்ரக்டர் வாகனச் சாரதி / லொறிச் சாரதி / நீர்மானி வாசிப்பாளர் / நீர்ப்பம்பி இயக்குபவர் சேவையைப் பெற்றுக்கொள்ளல்**
**(விண்ணப்பிக்கப்படும் பதவியைத் தவிர ஏனைய பதவிகளை ஒரே கோட்டால் வெட்டி விடவும்)**

01. விண்ணப்பதாரர் வசிக்கின்ற உள்ளூராட்சி நிறுவனம். ..............................................................

02. (அ) முதல் எழுத்துடன் பெயர் (தமிழில்) ..........................................................................
(ஆ) முழுப் பெயர் (தமிழில்) ..........................................................................
(இ) முழுப் பெயர் (ஆங்கில் கெப்பிட்டல் எழுத்தில்) ........................................................

03. தேசிய அடையாள அட்டை இலக்கம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

04. பிறந்த திகதி :- வருடம் : .....................மாதம் .................... திகதி: ....................

05. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் (2026.10.09) திகதிக்கு வயது :

வருடங்கள் .............. மாதங்கள் ...................... நாட்கள் ..................

06. பால் ............................ ..........................................................................

07. விவாகநிலை : ..........................................................................

08. நிரந்தர முகவரி : ..........................................................................

09. தொலைபேசி இல: ..........................................................................

10. நீங்கள் இலங்கை பிரசையா? : ..........................................................................................

அவ்வாறாயின் பரம்பரை அடிப்படையிலா? பதிவு செய்தல் அடிப்படையிலா? என்ற விபரம்

.....................................................................

11 கல்வித் தகைமைகள்

11. (I) க.பொ..த (சாதாரண தர ) பரீட்சை

ஆண்டு ....................
சுட்டிலக்கம் - ....................

| இல | பாடம் | பெற்றுள்ள சித்தி |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |
| 05. | | |
| 06. | | |
| 07. | | |
| 08. | | |
| 09. | | |
| 10. | | |

11. (II) க.பொ..த (உயர் தரப்) பரீட்சை

ஆண்டு ....................
சுட்டிலக்கம் - ....................

| இல | பாடம் | பெற்றுள்ள சித்தி |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |

11. வேறு கல்வித் தகைமைகள் குறித்த விபரங்கள்

.....................................................................................................................................

.....................................................................................................................................

12. தொழில் தகைமைகள் மற்றும் சேவை அநுபவம்.

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

13. விண்ணப்பதாரரின் அத்தாட்சிப்படுத்தல்

என்னால் மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியாதும் உண்மையானதும் என உறுதிப்படுத்துகின்றேன். மேலே குறிப்பிட்ட விபரங்கள் பொய்யானது என்பதாக நான் சேவைக்கு தெரிவு செய்யப்பட முன்னதாக நிரூபனமானால் நான் நியமனம் பெறத் தகுதியில்லாதவராதுடன், நியமனம் பெற்ற பின்னர் நிரூபனமானால் எந்த ஒரு இழப்பீடும் வழங்கப்படாத நிலையில் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனை அறிவேன்.

திகதி: ............................................

........................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்